<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 56/2017 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | முருகவேல் | நாள் | 12.09.2024 |
| தகப்பனார் பெயர் | சின்னதம்பி | | |

**<u>2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை:–</u>**

1) வாதி எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், தாவா சொத்து தனக்கு சொந்தமானது என கூறியும், தாவா சொத்து குறித்து 1ம் பிரதிவாதியின் பெயரில் வழங்கிய பட்டாவை ரத்து செய்ய கோரியும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை ஏதேனும் வந்ததா என்றால், இல்லை. வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரிதான். இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள என் முதல் விசாரணை சாட்சியத்தில் கண்டுள்ள சங்கதிகளை வழக்கறிஞருக்கு யார் சொன்னது என்றால், நான்தான் சொன்னேன்.

3) தாவா சொத்து வாதிக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால், தாவா சொத்து வாதியின் தகப்பனார் உடையது. அவரது தகப்பனாரால் வாதிக்கு வாய்மொழியாக ஒதுக்கப்பட்டதாகும். மேற்படி வாய்மொழியாக ஒதுக்கியதாக நான் சொல்லும் சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால், தெரியாது. கேள்விப்பட்டுள்ளேன். தாவா சொத்து எவ்வளவு விஸ்தீரணம் கொண்டது என்றால், 1181.78 சதுரடி கொண்டது. எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்றால், சர்வே நெம்பர் எனக்கு தெரியவில்லை.

4) வாதி என்ன பணி செய்து வந்தார் என்றால், ஒப்பந்ததாரராக பணியாற்றி வருகிறார். தற்போது எங்கு வசித்து வருகிறார் என்றால், தூக்கனாம்பட்டியில் வசிக்கிறார். எவ்வளவு காலமாக வசிக்கிறார் என்றால், சுமார் 50 வருடங்களுக்கு மேல் வசித்து வருகிறார்.

5) வாதி மேட்டூர் நகராட்சிக்கு வீட்டுவரி செலுத்தியதாக நான் சொல்லிய நிலையில், மேற்படி விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால், வீட்டுவரி ரசீதுகளை நான் பார்த்துள்ளேன். எந்த காலகட்டத்தில் அவ்வாறு வரி செலுத்தப்பட்டது என்றால், 1977 ம்

வருடத்திலிருந்து அவரது தந்தை லட்சுமண கவுண்டர் பெயரில் 2012ம் வருடம் வரை தொடர்ந்து செலுத்தி வருகிறார். நான் சொல்வது தவறானது என்றாலும், நான் என் முதல் விசாரணை சாட்சியத்திற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், வாதி எனக்கு உறவினர் என்பதால், அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

6) வாதி எப்போதிருந்து வீட்டு வரி செலுத்தி வந்தார் என்றால், 1977ம் வருடத்திலிருந்து செலுத்தி வருகிறார். இறுதியாக எப்போது செலுத்தினார் என எனக்கு தெரியாது. ஆனால் 2005ம் வருடத்தில் அவரது பெயரை வரி பதிவேட்டிலிருந்து எடுத்துவிட்டனர்.

7) 2, 3 பிரதிவாதிகளிடம் 1ம் பிரதிவாதி மோசடியாக பட்டா பெற்றுள்ளார் என நான் சொல்லியுள்ள நிலையில் எவ்வாறு மோசடியாக பட்டா பெற்றுள்ளார் என்றால், லட்சுமண கவுண்டர் மற்றும் முனுசாமி ஆகியோர் பெயர்களில் இருந்த வரிகளை நீக்கம் செய்துவிட்டு 1ம் பிரதிவாதி பெயரில் வரி விதித்துள்ளனர். அதை தான் அவ்வாறு சொல்லியுள்ளேன். அவ்வாறு 2, 3 பிரதிவாதிகள் மோசடி செய்துள்ளனர் என நான் சொல்லும் நிலையில், அது தொடர்பாக வருவாய் துறை உயர் அதிகாரிகளிடம் ஏதேனும் புகார் அளிக்கப்பட்டதா என்றால், வாதியின் சகோதரர் O.L.கோவிந்தராஜ் என்பவர் மூலம் புகார் அளிக்கப்பட்டது. ஆனால், அதன் பெயரில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. மேற்படி விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால், தெரியும்.

8) வருவாய் துறையினர் தனிப்பட்ட விருப்பு வெறுப்பின் அடிப்படையில் செயல்பட மாட்டார்கள் என்றாலும், சட்டப்படி தான் செயல்படுவார்கள் என்றாலும், நான் வாதியின் உறவினர் என்பதால், வாதிக்கு ஆதரவாக பொய்யான சங்கதிகளுடன் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

9) 1ம் பிரதிவாதி எந்தெந்த மனுக்களை தாக்கல் செய்து தன் பெயரில் வரி ரசீதுகளை மாற்ற பெற்றுள்ளார் என்ற விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால், தகவல் அறியும் உரிமை சட்டத்தின் படி வாதி மனு தாக்கல் செய்து மேற்படி சங்கதிகளை தெரிந்து கொண்டார். மேற்படி தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழான விசாரணைக்கு நானும் உடன் சென்றிருந்தேன். அதன் அடிப்படையில் எனக்கு தெரியும்.

10) 1ம் பிரதிவாதி சட்டத்துக்கு புறம்பான ஆவணங்களை பெற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் தாவா சொத்தில் நுழைந்ததாக சொல்லும் நிலையில், அது தொடர்பாக காவல்நிலையத்தில் ஏதேனும் புகார் அளிக்கப்பட்டதா என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது.

11) வாதி என்ன படித்துள்ளார் என்றால், அதுகுறித்து எனக்கு தெரியவில்லை. வாதி என் உறவினர் எனும் நிலையில் அவர் என்ன தொழில் செய்கிறார் என்பது குறித்தும், அவர் தாவா சொத்து தொடர்பாக என்னென்ன மனு அளித்துள்ளார் என்பது குறித்தும், அனைத்து விவரங்களும் எனக்கு தெரிந்துள்ள நிலையில், வாதி என்ன படித்துள்ளார் என்பது குறித்து எனக்கு தெரியவில்லை என நான் சொல்வது ஏற்கதக்கதல்ல என்றால், சரியல்ல.

12) 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளை பொறுத்த வரை சட்டப்படிதான் செயல்பட்டுள்ளனர் என்றாலும், மேற்படி பிரதிவாதிகளை பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும், சரியல்ல. நான் சொல்வது போல் வாதி 1977ம் வருடத்திலிருந்தே தாவா சொத்தில் சுவாதீன அனுபவத்தில் இருந்திருந்து வரி செலுத்தியிருந்தால் தாவா சொத்திற்குரிய அனைத்து ஆவணங்களையும் தன் பெயருக்கு மாற்றம் செய்திருப்பார் என்றாலும், தற்போது வழக்கிற்காக மேற்படி சங்கதிகளை நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் அளிக்கும் பொய்யான சாட்சியம் ஏற்கதக்கதல்ல என்றால், சரியல்ல.

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.